தேதி: 30-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC. 262/2018

வழக்கு சாட்சி எண். PW 5

பெயர்: ஞானசேகர் ஜாதி :

தந்தை பெயர் : தொழில்:

கிராமம்: சமயம்:

தாலுகா: வயது:

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது பண்ணைவிளை பங்களாவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் , என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தானா என்றால் சரிதான் . அந்த 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2. கடந்த 11.04.2018 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் மற்றும் வெங்கடேஷ் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க

கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3. சம்பவ இடமான பத்திரகாளி அம்மன் கோவில் மெயின் கேட் அருகே உள்ள இடத்தில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.